17th of Feb. 2011

# Friendship

a trilingual magazine

for your whole family

යාලුකම

நட்புறவு

language for friendship



ISAAC JESUTHAASON

Let's Learn
English & Sinhala


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரலாற்று ஞாபகத்திற்காக :
For Historical Rememberance :

# Friendship

- a trilingual magazine




| | |
|---|---|
| Writer | : Isaac Jesuthaason<br>28, 2/2 Fussels Lane,<br>Wellawatte,<br>Colombo - 06. |
| Printer | : Ruban Printers<br>Anaicoddai Junction,<br>Anaicoddai. |
| Official Release | : 17th of February, 2011 - The Birthday of the writer. |
| Commercial Release | : 22nd of February, 2011- The Birthday of loving son. |
| President of the Event | : Mrs. Jasintha Anton, Director / Principal,<br>British Business School & Gods Own Children. |
| First Copy to the Chief Guest | : Mr. T. Manoharan,<br>Personnel Manager,<br>Jaffna M.P.C.S. |
| Special Guests | : Dr. B. Ananthakumar, Chairman,<br>British Business School & Gods Own Children.<br><br>Mr. M. A. Thavanathan, Manager,<br>People's Bank, Navalar Road Branch. |
| Venue | : 560, Manipay Road, Anaicoddai. |
| Price | : 100/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## Contents :
உள்ளடக்கம்.


| | page |
|---|---|
| * For Historical Rememberance | 01 |
| * Contents | 02 |
| * About 'Friendship'. | 03 |
| * A few words with you in English & Tamil. | 04 & 5 |
| * Learning English in English & Tamil - Writer's view. | 06 |
| * A Wishing Poem in Tamil. | 07 |
| * Isaac's Seven Step English - Module 1. | 08 -14 |
| * What is 'Parts of Speech' in English. | 15 |
| * Necessary Vocabulary for the ISSE & What you have learnt up to now - a revision. | 16 |
| * The Knowledge of Sinhala Language by Mr. Poobalasingham. | 17 |
| * Let's learn Sinhala - Lesson 1. | 18 - 19 |
| * First hand vocabulary for both English and Sinhala courses. | 20 |
| * For Your Information. | 21 |
| * Abbreviations used in dictionaries & Using the dictionary usefully. | 22 & 23 |
| * A humble request to all the students - What you should do? | 24 |
| * A humble request to all the students - What you should not do? | 25 |
| * Formal Conversation ( in all three languages with some useful points). | 26 & 27 |
| * Masculine - Feminine (in family circles). | 28 |
| * Rhyming Beauty in English Language. | 29 |
| * How to use Idioms? | 30 & 31 |
| * Informations about our country. | 32 & 33 |
| * Technical Terms in the field of Maths - Part I. | 34 |
| * Let's know about the Medical Field - Part I. | 35 |
| * How to tell our diseases to a doctor ( a doctor - patient conversation). | 36 & 37 |
| * A model essay - The Unforgettable Day in my life with Tamil translation. | 38 & 39 |
| * A model official letter - a leave application with Tamil translation. | 40 |
| * Open Request to rectify grammatical mistakes. | 41 |
| * Competitions to win prizes - Vocabulary Power. | 42 |
| * Competitions to win prizes - Knowledge Power. | 43 |
| * Let's practice how to use the dictionary. | 44 |

* Snippets for your collection :
    - Knowledge Drops - about thefts. -23
    - Do you know these abbreviations? - A.T.M., D.V.D., & S.M.S. -27
    - Some words we should know. -29
    - Proudable Achievements of Srilankans. -31
    - Three Proverbs to memorize in this month. -37
    - The schedule of our World Cup matches this time. -38
    - The schedule of Quarter finals, Semifinals & the Final. -39

* Membership Application form for 'Friendship Readers' Club' - in the penultimate leaf.
* Coupons to send answers to the competitions - in the last leaf.
* In your next issue... - in the back cover.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Friendship

- a trilingual magazine

இப்பொழுது உங்கள் கைகளிலிருப்பது எமது நாட்டிலேயே முதல் முறையானது என பெருமைப்படக்கூடிய ஒரு வித்தியாசமான மாத சஞ்சிகையாகும். இதில் முதலாவது பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரவுள்ள புதுமைப் படைப்பான, ஆண்டு 6 தொடக்கம் ஆங்கிலம் தெரியாதவர்கள் எவரும் பயிலக்கூடிய,

Isaac's Seven Step English (ISSE)

என்கின்ற தாய்மொழியில் அமைந்த கற்கைநெறியும், இரண்டாவது பகுதியில் 'சிங்களம் கற்போம்' என்கின்ற தற்கால வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கற்கைநெறியும், மூன்றாவது பகுதியில் எத்தரப்பினரும் உங்கள் ஆங்கில அறிவை மட்டுமல்ல சிங்கள அறிவையும் மேம்படுத்தவென புதுமையான விடயங்களும் அடங்கியுள்ள அதேவேளை, ஆர்வம் குறையாத விதத்தில் பயிற்சிகள், போட்டிகள் உட்பட பல்வேறு அம்சங்களும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

இதிலிலுள்ள இரண்டு விசேட அம்சங்களாவன: முதலாவது, ISSE என்ற இலகுவான கற்கைநெறியினை நீங்கள் சிறிது சிறிதாகக் கற்று ஆங்கிலத்தில் பேசுகின்ற அளவுக்குத் தேர்ச்சியடையப்போகின்றீர்கள் என்பது. இரண்டாவது, சிங்கள மொழியிலும் படிப்படியாக O/L பரீட்சைக்குத் தோற்றக்கூடிய அறிவைப் பெறப்போகின்றீர்கள் என்பது.

ஆங்கில மொழியில் எழுதுதல், வாசித்தல், அவதானித்துக்கேட்டல், பேசுதல் என நான்கு பிரதான செயற்பாடுகள் அடங்கியுள்ளன. எழுதுதலைத் தவிர்ந்த மற்றைய மூன்று செயற்பாடுகளையும் கணிசமானவர்கள் தம்மால் முடியுமானவரை சமாளித்து வருகின்றனர். ஆனால் எழுதுதல் என்ற செயற்பாட்டுக்கு அவர்களும் ஏனையவர்களைப் போல தேர்ச்சியடைந்த ஒரு சிலரிலேயே தங்கியிருக்கவேண்டியிருக்கின்றது.

எமது சமுதாயத்தை எடுத்துக்கொண்டால், ஆங்கில எழுத்தாற்றல் உள்ளவர்களாலேயே எமது தேவைகளுக்காக பெரும்பாலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்கலாம். உதாரணமாக, ஒரு மேலதிகாரிக்குக் கடிதம் எழுதுவது, அரச தனியார் துறையினரிடமிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்களை வாசித்து விளங்கி தகுந்த பதில் அனுப்புவது, எமது பிரதேசத்திலுள்ள குறைபாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்காக பத்திரிகைகளில் சுட்டிக்காட்டுவது, இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுவாக, எழுத்தாற்றலுடனான ஆங்கில அறிவைக் கொண்டிருப்பவர்களே வாழ்க்கையில் முன்னேறக்கூடியதாக விருக்கின்றது. ஏனெனில், பெரும்பாலான நாடுகளில் ஆங்கிலமே சர்வதேசமொழியாக இருக்கின்றது. எனவே, நாமும் எழுத்தாற்றலுடன் கூடிய ஆங்கிலத்தேர்ச்சியைப் பெறவேண்டியது காலத்தின் தேவையாகும் என்பதை நன்கு புரிந்துகொள்வோம்.

இவைகளைக் கருத்திற்கொண்டு இந்த மாதாந்த சஞ்சிகையின் மூலம் உங்கள் அறிவை மேம்படுத்துதல் என்ற நிர்ணயிக்கப்பட்ட இலக்கை உங்கள் அனைவரதும் பூரண ஒத்துழைப்புக் கிடைத்தால் அதிக சிரமமின்றி அடையலாம் என்பது உறுதி.

எனவே மாதாந்தம் வெளிவரவிருக்கும் இச்சஞ்சிகைகளை ஒழுங்காக வாங்கி அதில் நீங்கள் செய்யவேண்டியவையை செய்வது விடைகளுடன் ஒப்பிட்டு அவற்றைத் திருத்துவது திருத்திய பின் அவற்றைச் சிறிது சத்தமாக வாசிப்பது உங்களுக்குப் புதியதாகவுள்ள தெரியாத சொற்களை அடுத்த இதழ் உங்கள் கைகளுக்குக் கிடைக்குமுன்னே மனனஞ்செய்வது போன்ற செயற்பாடுகளைக் கிரமமாகச் செய்வது போன்றவற்றை உங்களின் அன்றாட பழக்கமாக்கிக் கொள்வது எமது பயணத்தை இலகுவாக்கும்.

இச்சஞ்சிகையில் இறுதியில் இணைத்துள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து அதனுடன் எமது பிரதிநிதியிடம் 100 ரூபா செலுத்தி எமது பிரத்தியேக 'நட்புறவு' வாசகர் கழகத்தில் அங்கத்தவராகச் சேர்வதன் மூலம் மட்டுமே பரிசில்களுக்கான புதுமையான போட்டிகளில் பங்குபற்றுதல், அறிமுகப்படுத்தப்படவுள்ள பலவிதமான பரீட்சைகளில் தோற்றுதல், வித்தியாசமான கருத்தரங்குகளில் கலந்துகொள்ளல் போன்ற தகுதியை நீங்கள் பெறமுடியும். உங்கள் அங்கத்துவ இலக்கம் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும்

பல காரணங்களினால் இந்த முதல் முயற்சியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சில தவறுகள் இடம்பெற வாய்ப்புண்டு என்பதனால், வாசகர்கள் தயவு செய்து அவற்றைப் பொறுப்பதுடன், எமக்கு அறியத்தருவதன் மூலம் எமது சமூக நலனுக்காக உதவுவதுடன் அடுத்த இதழில் திருத்தங்களை வெளியிடவும் உதவியாக இருக்கும்.

நம்பிக்கை வைப்போம்! முயற்சிப்போம்!

**எம்மால் முடியும் !**

**எனை ஈன்ற என் அன்புத் தாய் தந்தையர்க்கு**
**இச்சஞ்சிகைத் தொடரை பெருமையுடன் சமர்ப்பிக்கின்றேன்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

A few words with you ....

Dear reader,

My heartiest thanks for being a reader of this unique magazine compiled specially for Srilankans to enrich your standard of English in a totally different manner. Meanwhile, a golden opportunity also has been created for everyone to learn the Sinhala language desirably to minimize the communication gap between the sinhalese and the tamils and build up the all important 'friendship' in future.

We all know well that, the standard of English not only at the rural schools and the schools which are in the remote areas but also at schools in the main cities has been declining continuously for the past few decades.

What is the reason for this continuous declination ?

Apparently, the srilankan students whose mother tongue is either Sinhala or Tamil, find it very difficult to understand the teachings in English medium because of language barrier.

Indeed, you all will agree with me in my openion that, the best way to make anybody to understand the maximum what we say, is using the mother tongue.

This is the concept which persuaded me to create my course, Isaac's Seven Step English (ISSE), in mother tongue. I have been using this same course to teach hundreds of students for about two decades and I am happy to say that, most of these students have successfully completed the course without much difficulty.

The distinctive feature of this unique magazine is, the inclusion of the above mentioned seasoned course as a series of small modules in it.

If you are weak or not having proficiency in English, now the time has come for you also to follow the ISSE course in your mother tongue and feel the difference in understanding the explanations in Tamil while reading this monthly magazine continuously.

I wholeheartedly wish, you also will benefit by this extraordinary magazine and attain proficiency in English as well as gain manageable knowledge in the Sinhala language, that will definitely uplift your life and help to bring lasting peace in our beautiful mother land.

I pray to St.Mary to guide me and give me the strength to fullfil this uphill task successfully.

Thank you.

**All actions results from thought, so it is thought that matters!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உங்களுடன் சில வார்த்தைகள்.....

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

விசேடமாக இலங்கையர்களான உங்களுக்கென முற்றிலும் வேறுபட்ட முறையில் உங்களின் ஆங்கிலத்தின் தரத்தை வளம்படுத்தவென தொகுக்கப்பட்ட இச்சிறப்பான சஞ்சிகையின் வாசகர்களாக இருப்பதற்காக எனது மனமார்ந்த நன்றிகள். அதேவேளை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையேயான தொடர்பாடல் இடைவெளியைக் குறைத்து மிகவும் முக்கியமான நட்புறவை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் சிங்களமொழியை ஆவலுடன் கற்பதற்கான ஒரு பொன்னான வாய்ப்பும் உருவாக்கப் பட்டிருக்கின்றது.

கிராமிய பாடசாலைகளிலும் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் மட்டுமல்ல பிரதான நகரங்களிலுள்ள பாடசாலைகளிலும் கூட ஆங்கிலத்தின் தரம் கடந்த சில தசாப்தங்களாக தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றதென்பது எங்கள் அனைவர்க்கும் நன்கு தெரியும்.

இந்த தொடர் வீழ்ச்சிக்கான காரணம் என்ன?

வெளிப்படையானதாக, சிங்களத்தையோ தமிழையோ தாய்மொழியாகக்கொண்ட இலங்கை மாணவர்கள், மொழி தடையாக இருக்கின்ற காரணத்தினால் ஆங்கில மொழிமூலத்திலான கற்பித்தல்களை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

உண்மையில், 'நாம் சொல்வதை எவரும் ஆகக்கூடியளவு விளங்கவைப்பதற்குரிய மிகச் சிறந்த வழி தாய்மொழியை உபயோகிப்பதே' என்ற எனது அபிப்பிராயத்தை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

இந்தக் கோட்பாடுதான் "Isaac's Seven Step English" (ISSE) என்ற எனது கற்கைநெறியைத் தாய்மொழியில் உருவாக்குவதற்கு என்னைத் தூண்டியது. கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக இதே கற்கைநெறியையே நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு உபயோகித்துவருகின்றேன் என்பதையும் இம் மாணவர்களுள் பெரும்பாலானவர்கள் அதிக சிரமமின்றி வெற்றிகரமாக இக்கற்கைநெறியை நிறைவுசெய்திருக்கின்றார்கள் என்பதையும் கூறிக்கொள்வதில் சந்தோஷமடைகின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்ட அனுபவப்பட்ட கற்கைநெறியானது ஒரு தொடராக இதில் சிறு அலகுகளாக உள்ளடங்கியிருக்கின்றமை இந்த ஒப்பற்ற சஞ்சிகையின் சிறப்பான அம்சமாகும்.

நீங்கள் ஆங்கிலத்தில் பலவீனமானவராகவோ தேர்ச்சியற்றவராகவோ இருந்தால், இந்தச் சஞ்சிகையைத் தொடர்ந்து வாசிக்கின்றவேளையில், 'ISSE' கற்கைநெறியை உங்களுடைய தாய்மொழியில் இலகுவாகக் கற்பதற்கும், தமிழில் விளக்கங்களை விளங்கிக்கொள்வதிலுள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்வதற்கும் இப்பொழுது உங்களுக்கும் காலம் வந்திருக்கின்றது.

நீங்கள் இந்த விஷேடமான சஞ்சிகையின் மூலம் ஆங்கிலத்தில் தேர்ச்சியையும் சிங்களத்தில் சமாளிக்கத்தக்க அறிவையும் பெற்று நன்மையடையவேண்டுமெனவும் அது உங்கள் வாழ்வை உயர்த்துவதுடன் எமது தாய் நாட்டில் நீடித்த சமாதானத்தையும் கொண்டுவருவதற்கு உதவவேண்டுமெனவும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்!

'இந்தக் கடினமான வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு என்னை வழிகாட்டவும் எனக்கு முழுப்பலத்தினைத் தரவும் பரி. மேரி மாதாவைப் பிரார்த்திக்கின்றேன்'

நன்றி!

**அனைத்துச் செயல்களும் எண்ணத்தின் விளைவுகளே, எனவே எண்ணமே முக்கியமாகும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Editorial

## Learning English

This is the talk in every nook and corner of our country now. Not only students from secondary schools to universities but also men and women from all walks of life badly need this foreign language for many inevitable reasons. Some of the most important reasons are, global communication, higher education, white collar jobs, international business, prestigeous social status etc.

So, in this civilized fast moving world each of us yearn for attaining proficiency in this language for any of the above mentioned reasons or some other reasons which are not mentioned above. Together with this, after the introduction of globalization policy, the environment in most of the European countries forces us to learn this language to a higher degree too. It means we should learn to read , listen, ,write and speak fluently.

In fact, it will take us some time to reach this higher standard but, we can do this through 3 'D's - Disire, Determination and Dedication.

If you could, you would be able to march around this modern world proudly as a distinguished personality.

" The knowledge of English with reading, listening, writing
and speaking skill is the need of today's world."

So, start learning today, do not postpone for tomorrow.

## ஆங்கிலம் கற்றல்

இன்று எமது நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இதுதான் பேச்சு. நடுத்தர பள்ளிக்கூடத்திலிருந்து பல்கலைக்கழகங்கள் வரையான மாணவர்கள் மட்டுமல்ல, வாழ்வின் சகல தரப்பையும் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட இந்த அந்நிய மொழி தவிர்க்க முடியாத பல காரணங்களுக்காகத் தேவைப்படுகின்றது. மிகவும் முக்கியமான சில காரணங்களாவன, உலகளாவிய தொடர்பாடல், உயர்கல்வி, (ஆடை அழுக்காகாத) உத்தியோகங்கள், சர்வதேச வர்த்தகம், கௌரவ சமூக அந்தஸ்து போன்றன.

எனவே, இந்த நாகரீகமடைந்த, விரைவாக நகர்ந்துகொண்டிருக்கின்ற உலகில், நாம் ஒவ்வொருவரும் மேலே குறிப்பிடப்பட்ட ஏதோ காரணத்துக்காகவோ, அன்றி வேறு காரணங்களுக்காகவோ, இந்த மொழியில் தேர்ச்சியடைய ஆவல்கொள்கின்றோம். இத்துடன், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் உலகமயமாக்கல் கொள்கை அமுலாக்கலுக்குப் பின்னரான சுற்றுச்சூழல், இம்மொழியை ஒரு உயர்ந்த தரத்திற்குக் கற்பதற்கு எம்மை நிர்ப்பந்திக்கின்றது. அதன் அர்த்தம் என்னவெனில், நாம் சரளமாக வாசிக்கவும், செவிமடுக்கவும், எழுதவும் மற்றும் பேசவும், கற்றுக் கொள்ளவேண்டும் என்பதாகும்.

உண்மையில், இந்த உயர் தரத்தை அடைவதற்குச் சிலகாலம் எடுக்கும். ஆனால் நாம் 3 'D' களான ஆர்வம், மனவுறுதி, மற்றும் அர்ப்பணிப்பின் ஊடாக இதனைச் செய்யமுடியும்.

உன்னால் முடியுமாயின், நீ ஒரு பிரத்தியேகமான பிரசித்திபெற்றவராக, இந்த நவீன உலகத்தைச்சுற்றிப் பெருமையுடன் பவனிவரக்கூடியதாகவிருக்கும்.

'வாசிக்கின்ற, செவிமடுக்கின்ற, எழுதுகின்ற, மற்றும் பேசுகின்ற, திறன்களுடன் கூடிய
ஆங்கில அறிவே, இன்றைய உலகின் தேவையாகும்'

எனவே, இன்றே கற்பதை ஆரம்பியுங்கள்! நாளைக்கு என பின்போடவேண்டாம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எமது காலத்தைய ஒரு சிறந்த கவிஞரினால் தமிழில் கவிதையில் ஒரு வாழ்த்து :
A Wish in Poem in Tamil by a great poet of our time:

## நட்புறவு - எனது பார்வையில்.....

நட்புறவு எனும் தலைப்பில் நல்லதொரு சஞ்சிகையை
நல்ல தருணமதில் வெளியிடும் ஆசிரியர்
உட்புறம் மட்டுமல்ல வெளிப்புறமும் அட்டைதனில்
நட்புறவின் அர்த்தத்தை அழகாய் சித்தரித்து
வாசகரின் எண்ணத்தில் ஆழமாய் பதிந்துள்ளார்
இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுத்தும் சிரமங்கள்
அனைத்தையும் தாண்டியவர் வெளியிடும் இந்நூலில்
செந்தமிழும் சிங்களமும் ஒன்றை ஒன்று தழுவுதற்கு
ஆங்கிலத்தைப் பாலமாக்கும் அழகு பிரமாதம்
எழுத வாசிக்க பேச உதவியாய்
ஏராளம் நுட்பங்கள் இலகுவாய் பயன்படுத்தி
எழுதிய திறமையது ஆசிரியர் கைவண்ணம்
மும்மொழியும் சங்கமிக்கும் இந்நூலில் அடங்கியுள்ள
குட்டித் தகவல்கள் பெரிய விடயங்கள்!
எம்மொழியைச் சேர்ந்தவரும் இலகுவில் கற்பதற்கு
ஏற்றமுடன் கைகொடுக்கும் இந்நூலை உம் கரத்தில்
எடுத்து வாசித்துப் பயன்பெற வாழ்த்துகிறேன்.

- நவாலியூர் நாயகி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Isaac's Seven Step English

நீங்கள் 100 % விளங்குவதற்காக தாய்மொழியில் உருவாக்கப்பட்டது

by

Isaac Jesuthaason

- About English language... - ஆங்கில மொழியைப் பற்றி...

01. எந்த நாடு ஆங்கிலத்தின் மூலஸ்தானம்?
   - Which country is the origin of the English language?
   - ஆங்கில மொழியின் மூலஸ்தானம் இங்கிலாந்து ஆகும்.
   - The origin of the English language is England.

02. அதில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன?
   - How many letters are there in it?
   - அதில் 26 எழுத்துக்கள் இருக்கின்றன.
   - There are 26 letters in it.

03. எவ்வாறு அனைத்து எழுத்துக்களும் அழைக்கப்படுகின்றன?
   - How is all the letters called?
   - அனைத்து எழுத்துக்களும் நெடுங்கணக்கு என அழைக்கப்படுகின்றன.
   - All the letters is called the alphabet.

04. நாம் எவ்வாறு அனைத்து வாக்கியங்களையும் இரண்டாகப் பிரிக்கலாம்?
   - How can we divide all the sentences into two?
   - நாம் அவற்றைத் தன்வினை பிறவினை என இரண்டாகப் பிரிக்கலாம்.
   - We can divide them into two as Active voice and Passive voice.

05. தன்வினையில் எத்தனை காலங்கள் இருக்கின்றன?
   - How many tenses are there in Active voice?
   - தன்வினையில் 12 காலங்கள் இருக்கின்றன.
   - There are 12 tenses in Active voice.

06. அவைகள் எவை?
   - What are they?
   - அவைகளாவன
   - They are,

| | | | |
|---|---|---|---|
| 01. Present tense | 04. Present continuous tense | 07. Present perfect tense | 10. Present perfect continuous tense |
| 02. Past tense | 05. Past continuous tense | 08. Past perfect tense | 11. Past perfect continuous tense |
| 03. Future tense | 06. Future continuous tense | 09. Future perfect tense | 12. Future perfect continuous tense |

07. பிறவினையில் எத்தனை காலங்கள் இருக்கின்றன?
   - How many tenses are there in Passive voice?
   - பிறவினையில் 08 காலங்கள் மட்டுமே இருக்கின்றன.
   - There are only 08 tenses in Passive voice.

08. அவைகள் எவை?
   - What are they?
   - அவைகளாவன
   - They are,

| | | | |
|---|---|---|---|
| 01. Present tense | 04. Present continuous tense | 06. Present perfect tense | 00. - - - - - - - - (no) |
| 02. Past tense | 05. Past continuous tense | 07. Past perfect tense | 00. - - - - - - - - (no) |
| 03. Future tense | 00. - - - - - - - - (no) | 08. Future perfect tense | 00. - - - - - - - - (no) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Module - 1

STEP ONE

1.1 ஆங்கில எழுத்துக்கள் - English letters

■ Capital letters :

பெயர்கள், வாக்கியங்கள், வினாக்கள் ஆகியவற்றின் ஆரம்ப எழுத்துக்களையும் நான் என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றபோதும் உபயோகிக்கவேண்டிய எழுத்துக்கள்.

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z

■ Simple letters :

பெயர்கள், வாக்கியங்கள், வினாக்கள் ஆகியவற்றின் ஆரம்ப எழுத்துக்களையும் நான் என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றதையும் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் உபயோகிக்கவேண்டிய எழுத்துக்கள்.

a b c d e f g h i j k l m n o p q r s t u v w x y z

மேலே சொல்லப்பட்டவாறு Capital letters பந்தியில் சரியாக அமைந்திருப்பதை அவதானிக்க. capital letters கருமையாக்கப்பட்டிருக்கின்றன.

**I** am **P**remkumar. **M**y brother **S**ureshkumar studies at the **R**oyal college, **C**olombo. **H**e didn't go to **K**andy with father last **S**aturday. **F**ather will return to **C**olombo on **M**onday. **M**other and **I** went to the **A**rpico super market and bought many things including some packets of **N**ewdale pasturized milk. **S**uresh and **I** use to drink milk before going to bed.

1.2 வாக்கியங்கள் - Sentences :

■ இவற்றில் முக்கியமான இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன,

1. செய்வினை / தன்வினை - Active voice
2. செயப்பாட்டுவினை / பிறவினை - Passive voice

எமது சிறு பராயத்தில் செய்வினை வாக்கியங்களையே நாம் தேவைக்கேற்ப உபயோகிக்கின்றோம். விளங்கக்கூடிய வயதை அடைந்த பின்னரே செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கற்கின்றோம் அல்லது கற்பிக்கப்படுகின்றோம்.

எனவே இக்கற்கைநெறியிலும் முதலில் செய்வினை வாக்கியங்களை விளங்கிய பின்னர் செயப்பாட்டுவினை வாக்கியங்களை அறிந்துகொள்வது என்ற யதார்த்தமான முறையை நாமும் பின்பற்றுவோம்.

■ தன்வினை பிறவினை வாக்கியங்களின் வித்தியாசம் -
The difference between Active & Passive voice sentences :

1. நான் ஒரு பட்டம் செய்தேன். - ஒரு பட்டம் என்னால் செய்யப்பட்டது.
2. அம்மா எங்களுடைய குசினியைக் கழுவினாள். - எங்களுடைய குசினி அம்மாவினால் கழுவப்பட்டது.
3. ராஜா சிகரட் விற்பனைசெய்வதில்லை. - சிகரட் ராஜாவினால் விற்பனைசெய்யப்படுவதில்லை.
4. இலங்கை தேயிலையை ஏற்றுமதிசெய்கின்றது. - தேயிலை இலங்கையினால் ஏற்றுமதிசெய்யப்படுகின்றது.
5. உலக வங்கி இலகு தவணைக் கடன் வழங்கும். - உலகவங்கியினால் இலகு தவணைக்கடன் வழங்கப்படும்.

குறிப்பு : தன்வினை வாக்கியத்திலுள்ள ஒரு சொல் அல்லது சொற்கூட்டம் பிறவினை வாக்கியங்களில் எழுவாயாக அமைந்திருப்பதை அவதானிக்க. இதுதான் செயப்படுபொருள் என அழைக்கப்படுகிறது. இது பெரும்பாலும் ஆரம்பத்தில் அமைந்தாலும் வேறிடத்திலும் அமையலாம்.
(உ-ம் : 5) பின்னர் பிறவினைபற்றிப் படிக்கும்போது மேலும் விளக்கங்கள் தரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

■ தன்வினையில் ஒரு ஆங்கில வாக்கியத்தில் சொற்களின் வரிசைக்கிரமம்
- The order of the words in an English sentence in Active voice :

முதலில் தமிழில் உள்ள ஒரு வாக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அது எவ்வாறு அமைகின்றதென்று பார்ப்போம்.

நாங்கள் ஒவ்வொருநாளும் சோறு சாப்பிடுகின்றோம்.
- We eat rice everyday.

இதிலிருந்து ஒரு தமிழ் வாக்கியத்தில் சொற்கள் அமைந்திருக்கும் ஒழுங்கிற்கும் ஒரு ஆங்கில வாக்கியத்தில் சொற்கள் அமைந்திருக்கும் ஒழுங்கிற்குமிடையே பெரிய வேறுபாடு இருப்பதை அவதானிக்க.

எனவே ஒரு ஆங்கில வாக்கியத்தில் சொற்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை அடுத்ததாகத் தெரிந்து கொள்வோம்.

We eat rice everyday.

1. எழுவாய் - subject
2. வினைச்சொல் - verb
3. செயப்படுபொருள் - object
4. காலம் - time

அதாவது ஒரு ஆங்கில வாக்கியத்தில்,
முதலாவதாக எழுவாயும்,
இரண்டாவதாக வினைச்சொல்லும்,
மூன்றாவதாக செயப்படுபொருளும்,
இறுதியாக காலமும் அமைந்திருக்கின்றன.

**முக்கிய குறிப்பு** : இவையனைத்தும் ஒரு வாக்கியத்தில் கட்டாயமாக அமையவேண்டுமென்பதில்லை. செயப்படு பொருள் அமையாத வாக்கியங்களும், காலம் அமையாத வாக்கியங்களும், செயப்படுபொருளும் காலமும் அமையாத வாக்கியங்களும் உண்டு. ஆனால் வினைச்சொல் அமையாத எந்த வாக்கியமும் இல்லை.

இங்கு தரப்பட்டிருக்கும் வாக்கியங்களின் வகைகளையும் கீழேயுள்ள அவற்றுக்கான உதாரணங்களையும் கவனிக்க.

| | | |
|---|---|---|
| 1 | அனைத்தும் அமைகின்ற வாக்கியம் | subject + verb + object + time |
| 2 | செயப்படுபொருள் அமையாத வாக்கியம் | subject + verb + ---------+ time |
| 3 | காலம் அமையாத வாக்கியம் | subject + verb + object + ------ |
| 4 | செயப்படுபொருளும் காலமும் அமையாத வாக்கியம் | subject + verb + ---------+ ------ |

| | | |
|---|---|---|
| 1 | I bought apple yesterday. | நான் நேற்று அப்பிள் வாங்கினேன். |
| 2 | He will come on Monday. | அவன் திங்கட்கிழமை வருவான் |
| 3 | Mala eats fruits. | மாலா பழங்கள் சாப்பிடுகின்றவள். |
| 4 | The parrot speaks. | கிளி பேசுகின்றது. |

மேலேயுள்ள உதாரணம் 2 இல் 'on' என்ற மேலதிகச் சொல் இடம்பெற்றிருக்கின்றது. இது preposition - இடையுரிச்சொல் எனப்படும். இது பற்றிய விளக்கம் இனிமேல் அவ்வப்போது தரப்படும்.

preposition 'on' : எப்போதும் கிழமைகளைக் குறிப்பிடும்போது இது முன்னால் அமையும்.

இவ்வாறே உதாரணம் 4 இல் 'the' என்ற மேலதிகச் சொல் இடம்பெற்றிருக்கின்றது. இது definite article - திடமான சுட்டிடைச்சொல் எனப்படும். இது பற்றிய விளக்கமும் இனிமேல் அவ்வப்போது தரப்படும். இங்கே

definite article 'the' :ஒரு பொதுவான உண்மையை ஒருமையில் குறிப்பிடும்போது இது முன்னால் அமையும்.

இனி, எழுவாய், வினைச்சொல், செயப்படுபொருள், காலம் என்பனவற்றைப் பற்றி தனித்தனியாகப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1.3 எழுவாய் - Subject :

* எழுவாய் பொதுவாக ஒரு வாக்கியத்தின் ஆரம்பத்திலேயே அமைந்திருக்கும்.
* எழுவாயை செய்பவர் - doer எனவும் அழைப்பதுண்டு.
* அத்தனை எழுவாய்களையும் 7 எழுவாய்களைக்கொண்ட ஒரு பொதுவான தொகுதிக்குள் உள்ளடக்கலாம்.

பொதுவான எழுவாய்த்தொகுதி :

| | | |
|---|---|---|
| 1. | I | - நான் |
| 2. | We | - நாங்கள், நாம் |
| 3. | They | - அவர்கள், அவைகள் |
| 4. | You | - நீ, நீங்கள் |
| 5. | He | - அவன், அவர் |
| 6. | She | - அவள், அவ |
| 7. | It | - அது |

- இப்பொதுவான எழுவாய்த்தொகுதி எவ்வாறு அனைத்து எழுவாய்களையும் பிரதியீடுசெய்கின்றது என்பதை இனி விரிவாகப் பார்ப்போம்.

| நாம் சாதாரணமாகக் கேட்கின்ற (listen) சில வாக்கியங்கள். எழுவாய்கள் கருமையாக்கப்பட்டிருக்கின்றன. | வாக்கியத்தில் அமைந்திருக்கின்ற எழுவாய்கள் ஆங்கிலத்தில். |
|---|---|
| 01. **நான்** நேற்று குமாரைச் சந்தித்தேன். | I |
| 02. **எனது அம்மா** வெள்ளிக்கிழமைகளில் மரக்கறி மட்டும் சமைக்கின்றவள். | My mother |
| 03. **இலங்கையர்கள்** ஐரோப்பிய நாடுகளில் குடியேற விரும்புகின்றனர். | Srilankans |
| 04. **மாமாவும் மாமியும்** இப்பொழுது சந்தோஷமாக இருக்கின்றார்கள். | Uncle and aunty |
| 05. **எமது அரசாங்கம்** விரைவில் புதிய கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தும். | Our government |
| 06. **நானும் ரவியும்** நேற்றுப் பின்னேரம் கரம் விளையாடிக்கொண்டிருந்தோம். | Ravi and I |
| 07. **நீயும் உனது சகோதரனும்** கெட்டிக்காரர்கள். | You and your brother |
| 08. **உங்களுடைய நாய்** நேற்று எங்களுடைய பூனையைத் துரத்தியது. | Your dog |
| 09. **அமெரிக்க ஜனாதிபதி** அடுத்த வருடம் குவைத்துக்கு விஜயஞ்செய்வார். | American president |
| 10. **சனத் ஜெயசூரியா** பல உலக சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றார். | Sanath Jeyasooriya |
| 11. **உள்ளூர் உற்பத்திப்பொருட்கள்** வெளிநாடுகளில் சந்தைப்படுத்தப்படும். | Local products |
| 12. **லீலா** இரவில் தொலைக்காட்சி நாடகங்கள் பார்க்கத் தவறுவதில்லை. | Leela |

**குறிப்பு** : தமிழில் **'நானும் ரவியும்'** என்றிருக்கும் எழுவாய் ஆங்கிலத்தில் **'Ravi and I'** என, **நான்** பின்னால் அமைந்திருப்பதை அவதானிக்க. ஆங்கிலமொழியில் நான் என்பதைத் தாழ்மைப்படுத்துதல் என்கின்ற உயரியபண்புக்காகவே அவ்வாறு அமைக்கப்படுகின்றது. நாமும் அவ்வாறே பின்பற்றுவோம்.

மேலேயுள்ள எழுவாய்களனைத்தையும் எவ்வாறு பொதுவான எழுவாய்த்தொகுதி பிரதியீடுசெய்கின்றதென்பதை இங்கு அவதானியுங்கள்.

| | |
|---|---|
| எந்த எழுவாயும் பிரதியீடுசெய்யாது | I |
| Srilankans<br>Ravi and I | We |
| Uncle and aunty<br>Local products | They |
| You and brother | You |
| American president<br>Sanath Jeyasooriya | He |
| My mother<br>Mala | She |
| Our government<br>Your dog | It |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1.4 வினைச்சொல் - Verb :

* வினைச்சொல் ஆங்கில வாக்கியங்களில் எழுவாய்க்கு அடுத்ததாக அமைந்திருக்கும்.
* ஒரு வாக்கியத்திலுள்ள செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்லாகும்.
* வினைச்சொல் இல்லாமல் ஒரு வாக்கியமோ வினாவோ அமையாது.

■ **வினைச்சொல்லுக்கும் காலங்களுக்கும் உள்ள தொடர்பு :**

காலங்கள் - Tenses

**தமிழ் மொழி - 03**

01. இறந்தகாலம்
02. நிகழ்காலம்
03. எதிர்காலம்

உதாரணங்கள் :

01. நான் ஒரு கடிதம் எழுதினேன்.
02. நான் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றேன்.
03. நான் ஒரு கடிதம் எழுதுவேன்.

**English Language - 12**

01. Simple present
02. Simple past
03. Simple future
04. Present continuous
05. Past continuous
06. Future continuous
07. Present perfect
08. Past perfect
09. Future perfect
10. Present perfect continuous
11. Past perfect continuous
12. Future perfect continuous

தமிழ் மொழியில் காலங்களின் வேறுபாட்டை வினைச்சொல்லில் மாற்றங்களைச் செய்வதன் மூலமே காட்டுகின்றோம். மேலேயுள்ள உதாரணங்களில் 'எழுதுதல்' என்ற வினைச்சொல்லின் மாற்றங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறே ஆங்கில மொழியில் உள்ள 12 காலங்களின் வேறுபாட்டையும் வினைச்சொல்லில் மாற்றங்களைச் செய்வதன் மூலமே காட்டவேண்டியிருப்பதுடன் சில காலங்களில் வாக்கியங்கள் அமையும்போது ஒரே வினைச்சொல் எழுவாய்களுக்கேற்ப வித்தியாசமாக அமைவதையும் கீழ் வரும் இரு உதாரணங்களிலும் அவதானியுங்கள்.

■ உதாரணம் 1 - Simple present tense :

* I go to school by bus.
* Rajah goes to school by bus.

இங்கே, 'I' என்ற எழுவாய்க்கு 'go' என்ற வினைச்சொல் மாற்றமில்லாமலும்,
'Rajah' என்ற எழுவாய்க்கு 'goes' என மாற்றத்துடனும் அமைந்திருக்கின்றது.

■ உதாரணம் 2 - Present perfect tense :

* We have made noodles for dinner many times.
* Aunty has made noodles for dinner many times.

இங்கே, 'We' என்ற எழுவாய்க்கு வினைச்சொல் 'have made' எனவும்,
'Aunty' என்ற எழுவாய்க்கு 'has made' எனவும், வித்தியாசமாக அமைந்திருக்கின்றது.

இவ்விரு உதாரணங்களிலுமிருந்து சில 'tense' களில் நாம் எழுவாய்க்கு ஏற்ப வினைச்சொல்லில் மாற்றஞ்செய்ய வேண்டிய தேவை ஏற்படுவதனால் நாம் குறிப்பிட்ட எழுவாயை இனங்காணவேண்டும். இதற்கு எழுவாய்களைப்பற்றி ஏற்கனவே 1.3 இல் தரப்பட்ட விளக்கத்தைப் பயன்படுத்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் செய்வினையிலுள்ள 12 காலங்களுக்கும் செயப்பாட்டுவினையிலுள்ள 08 காலங்களுக்குமான மாற்றங்களைச் செய்வதற்கு ஒரு வினைச்சொல்லினுடைய கீழ்வரும் பதங்கள் தான் அடிப்படையாகும்.

| | | | |
|---|---|---|---|
| stem | past tense | past participle | present participle |

எனவே நாம் அவற்றைச் சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே இக்கற்கைநெறியில் அவ்வப்போது தரப்படுகின்ற வினைச்சொற்களனைத்தையும் நீங்கள் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும். உங்களின் சொல்வளம் இயலுமான அளவு வினைச் சொற்களாலேயே கட்டியெழுப்பப்படவேண்டும்.

ஆரம்ப அப்பியாசங்களுக்குத் தேவையான வினைச்சொற்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 01. வணங்குதல் | pray | prayed | prayed | praying |
| 02. விளையாடுதல் | play | played | played | playing |
| 03. வருதல் | come | came | come | coming |
| 04. போதல் | go | went | gone | going |
| 05. படித்தல் | study | studied | studied | studying |
| 06. வசித்தல் | live | lived | lived | living |
| 07. குடித்தல் | drink | drank | drunk | drinking |
| 08. சமைத்தல் | cook | cooked | cooked | cooking |
| 09. சாப்பிடுதல் | eat | ate | eaten | eating |
| 10. சந்தித்தல் | meet | met | met | meeting |
| 11. நித்திரைசெய்தல் | sleep | slept | slept | sleeping |
| 12. எழும்புதல் | get up | got up | got up | getting up |

■ **சில விளக்கங்கள் :**

ஒரு 'stem', உயிரெழுத்தைத்தொடர்ந்து மெய்யெழுத்துடன் முடிவடைந்தால், அது 'past tense' ஆகவோ 'past participle' ஆகவோ மாற்றடையும்போது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மெய்யெழுத்து இரட்டிப்பாகி '+ed' என அமையும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| stop | stopped | stopped | தவிர்த்தி (exception) : | market | marketed | marketed |
| fit | fitted | fitted | | enjoy | enjoyed | enjoyed |

இவ்வாறே 'present participle' ஆக மாற்றடையும்போது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மெய்யெழுத்து இரட்டிப்பாகி '+ing' என அமையும்.

| | | | | |
|---|---|---|---|---|
| clap | clapping | தவிர்த்தி (exception) : | market | marketing |
| cut | cutting | | enjoy | enjoying |

ஒரு 'stem', 'e' இல் முடிவடைந்தால் 'present participle' ஆக மாற்றடையும்போது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் 'e' இடம்பெறாமல், '+ing' என அமையும்.

| | | | | |
|---|---|---|---|---|
| come | coming | தவிர்த்தி (exception) : | see | seeing |
| take | taking | | dye | dyeing |

## 1.5 செயப்படுபொருள் - Object :

* இது எல்லா வாக்கியங்களிலும் அமைந்திருப்பதில்லை.
* இது செய்வினை வாக்கியங்களில் நடுவில் அமைந்திருக்கும்.
* இது செயப்பாட்டுவினை வாக்கியங்களில் எழுவாயாக அமைந்திருக்கும்.

| செயப்படுபொருள் அமைந்துள்ள சில வாக்கியங்கள் : அவதானிப்பதற்காக அவை கருமையாக்கப்பட்டுள்ளன. | வாக்கியத்தில் அமைந்திருக்கின்ற செயப்படுபொருள் ஆங்கிலத்தில். |
|---|---|
| 01. நான் ஒவ்வொருநாளும் **கடவுளை** வணங்குகின்றேன். | God |
| 02. நாங்கள் நேற்றிரவு **தாத்தாவை** மருத்துவமனையில் அனுமதித்தோம். | grand father |
| 03. நாங்கள் சந்தையில் **மரக்கறி** வாங்குகின்றோம். | vegetable |
| 04. தபால்காரன் 10 மணியளவில் **கடிதம்** கொண்டுவருகின்றவன். | letter |
| 05. அக்கா இன்று காலையில் **தேநீர்** தயாரித்தாள். | tea |
| 06. தாய் **குழந்தையைக்** குளிப்பாட்டினாள். | baby |
| 07. அவர்கள் காலையில் **கோப்பி** குடிக்கின்றனர். | coffee |
| 08. மாமா 2009 ம் ஆண்டில் **ஒரு வீடு** கட்டினார். | a house |
| 09. கீதா காலையில் **உடுப்புக்களைக்** கழுவுகின்றவள். | clothes |
| 10. அப்பா தொலைக்காட்சியில் **செய்தி** பார்த்தார். | news |
| 11. ஆசிரியர் **சில மாணவர்களை** வெளியே அனுப்பினார். | some students |
| 12. அனிற்றா **20 முட்டைகள்** விற்றாள். | 20 eggs |

**குறிப்பு** : செயப்படுபொருள் என்பது ஒரு பொருளாகத்தான் இருக்கும் என்ற ஒரு பிழையான கருத்து பல மாணவர்கள் மத்தியில் இருப்பதை அநுபவத்தில் கண்டிருக்கின்றேன். அது தவறான கருத்து. மேலே 2 வது வாக்கியத்தில் 'தாத்தா' செயப்படுபொருளாக வருவது இதனை விளங்கிக்கொள்வதற்குப் போதுமானது. எனவே 'பொருள்' என முடிவுறுவதால் அது பொருளைக் குறிக்கவில்லை என தெளிவாக விளங்கிக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1.6 காலம் - Time :

* இது பொதுவாக வாக்கியங்களின் இறுதியில் அமையும்.
ஆரம்பத்தில் அமைப்பதாயின், ஒரு கமாவை (coma - ,) இட்டுவிட்டு எழுவாயை அமைக்க.
(eg. : Yesterday, I met him on the way.)

* இது அமையப்பெறாத வாக்கியங்களும் உண்டு.
(eg. : He meets me at school.)

| காலம் அமைந்துள்ள சில வாக்கியங்கள் : அவதானிப்பதற்காக அவை கருமையாக்கப்பட்டுள்ளன. | வாக்கியத்தில் அமைந்திருக்கின்ற காலம் ஆங்கிலத்தில். |
|---|---|
| 01. நான் **ஒவ்வொருநாளும்** ஆங்கிலம் படிக்கின்றேன். | everyday |
| 02. எனது நண்பன் **நேற்று** என்னைச் சந்தித்தான். | yesterday |
| 03. அப்பா **நாளை** வேலைக்குப் போவார். | tomorrow |
| 04. மாமா **இன்று** எங்களுடைய **வீட்டுக்கு** வருவார். | today |
| 05. ராஜா **காலையில்** தனது பாடங்களைப் படிக்கின்றவன். | morning |
| 06. நாங்கள் **பின்னேரத்தில்** விளையாடுகின்றோம். | evening |
| 07. நான் **நேற்றிரவு** கடவுளை வணங்கினேன். | last night |
| 08. அவர்கள் **போனமாதம்** இந்தியாவுக்குப் போனார்கள். | last month |
| 09. அம்மா **இன்றிரவு** வழமை போல ரீவியில் நாடகம் பார்ப்பாள். | tonight |
| 10. தம்பி **அடுத்த வருடம்** சாதாரண தர பரீட்சை எடுப்பான். | next year |
| 11. அம்மம்மா **இரவில்** பாண் சாப்பிடுகின்றவள். | night |
| 12. அப்பா **திங்கட்கிழமை** வழக்கறிஞரைச் சந்தித்தார். | Monday |

■ **வாக்கியங்களை அமைப்பதற்கு தேவையானவை :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| என்னுடைய<br>எனது | my | என்னை | me | எனக்கு | me |
| எங்களுடைய<br>எமது | our | எங்களை<br>எம்மை | us | எங்களுக்கு<br>எமக்கு | us |
| அவர்களுடைய<br>அவர்களது<br>தங்களுடைய<br>தமது | their | அவர்களை<br>தங்களை<br>தம்மை | them | அவர்களுக்கு<br>தங்களுக்கு<br>தமக்கு | them |
| உன்னுடைய<br>உனது<br>உங்களுடைய<br>உங்களது<br>உம்முடைய<br>உமது | your | உன்னை<br>உங்களை<br>உம்மை | you | உனக்கு<br>உங்களுக்கு<br>உமக்கு | you |
| அவனுடைய<br>அவனது<br>அவருடைய<br>அவரது<br>தன்னுடைய<br>தனது | his | அவனை<br>அவரை<br>தன்னை | him | அவனுக்கு<br>அவருக்கு<br>தனக்கு | him |
| அவளுடைய<br>அவளது<br>தன்னுடைய<br>தனது<br>அவவுடைய | her | அவளை<br>அவவை<br>தன்னை | her | அவளுக்கு<br>அவவுக்கு<br>தனக்கு | her |
| அதனுடைய<br>அதனது<br>தன்னுடைய<br>தனது | its | அதனை<br>அதை<br>தன்னை | it | அதற்கு<br>அதுக்கு<br>தனக்கு | it |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

■ ஆங்கிலத்தில் **'Parts of Speech'** என்றால் என்ன? - **What is 'Parts of Speech' in English?**

01. Noun - பெயர்ச்சொல்
02. Pronoun - பிரதிப்பெயர்ச்சொல்
03. Adjective - பெயரடைமொழி
04. Verb - வினைச்சொல்
05. Adverb - வினையடைமொழி
06. Preposition - இடையுரிச்சொல்
07. Conjunction - இணைப்புச்சொல்
08. Interjection - விழிப்புச்சொல்

01. பெயர்ச்சொல் என்றால் என்ன? - What is Noun?
- Noun is the name of a person place animal or thing.
- ஒரு நபர், இடம், மிருகம் அல்லது பொருளினுடைய பெயர், பெயர்ச்சொல்லாகும்.

eg. : teacher, Rajah, dog, book, etc.

02. பிரதிப்பெயர்ச்சொல் என்றால் என்ன? - What is Pronoun?
- Pronoun is the word which stands for a noun.
- ஒரு பெயர்ச்சொல்லுக்காகத் தாங்கிநிற்கும் சொல், பிரதிப்பெயர்ச்சொல்லாகும்.

eg. : he, it, she, his, their, etc.

03. பெயரடைமொழி என்றால் என்ன? - What is Adjective?
- Adjective is the word that discribes a noun.
- ஒரு பெயர்ச்சொல்லை விபரிக்கின்ற சொல், பெயரடைமொழியாகும்.

eg. : good, healthy, blue, third, etc.

04. வினைச்சொல் என்றால் என்ன? - What is Verb?
- Verb is the word which denotes an action.
- ஒரு செயலைக் குறிக்கின்ற சொல் வினைச்சொல்லாகும்

eg. : eat, like, write, send, etc.

05. வினையடைமொழி என்றால் என்ன? - What is Adverb?
- Adverb is the word which discribes a verb.
- ஒரு வினைச்சொல்லை விபரிக்கின்ற சொல், வினையடைமொழியாகும்.

eg. : usually, temporarily, fast, always, etc.

06. இடையுரிச்சொல் என்றால் என்ன? - What is Preposition?
- Preposition is the word which shows the relationship between words.
- சொற்களுக்கிடையேயுள்ள தொடர்பைக் காட்டுகின்ற சொல், இடையுரிச்சொல்லாகும்.

eg. : in, on, from, near, etc.

07. இணைப்புச்சொல் என்றால் என்ன? - What is Conjunction?
- Conjunction is the word which connects two sentences or words.
- இரண்டு வாக்கியங்களையோ சொற்களையோ இணைக்கின்ற சொல், இணைப்புச்சொல்லாகும்.


eg. : and, but, if, so, etc.

08. விழிப்புச்சொல் என்றால் என்ன? - What is Interjection?
- Interjection is the word which shows our emotions.
- எமது உணர்ச்சிகளைக் காட்டும் சொல், விழிப்புச்சொல்லாகும்.

eg. : Ah!, Alas!, Hurrah!, Hi!, etc.

* **Parts of speech** அனைத்தும் கீழேயுள்ள வாக்கியத்தில் அமைந்திருப்பதை அவதானியுங்கள்.

Well! we live peacefully, because of good neighbours.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- **Necessary vocabulary for the ISSE Course -**
  **ISSE பாடநெறிக்குத் தேவையான சொல்வளம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொருநாளும் | - everyday | தேநீர் | - tea | கடவுள் | - God |
| நேற்று | - yesterday | கோப்பி | - coffee | அம்மா | - mother |
| நாளை | - tomorrow | தண்ணீர் | - water | அப்பா | - father |
| இன்று | - today | பால் | - milk | சகோதரன் | - brother |
| காலை | - morning | இடியப்பம் | - string hopper | சகோதரி | - sister |
| மாலை | - evening | கோவில் (இந்து) | - temple | தாத்தா | - grand father |
| இரவு | - night | ஆலயம் (கிறீஸ்தவம்) | - church | பாட்டி | - grand mother |
| நண்பகல் | - noon | வீடு | - house / home | நண்பன் | - friend |
| நடுச்சாமம் | - midnight | பள்ளிக்கூடம் | - school | ஆசிரியர் | - teacher |
| போனமாதம் | - last month | ஆஸ்பத்திரி | - hospital | அதிபர் | - principal |
| அடுத்த கிழமை | - next week | சந்தை | - market | மாமா | - uncle |
| இந்த வருடம் | - this year | வழமையாக | - usually | மாமி | - aunt / aunty |
| சோறு | - rice | ஒழுங்காக | - regularly | அரசாங்கம் | - government |
| கறி | - curry | விரைவாக | - quickly | மக்கள் | - people |
| பாண் | - bread | மெதுவாக | - slowly | மாணவன் | - student |
| நாடகம் | - drama | நட்பாக | - friendly | பெற்றோர் | - parent |
| படம் | - film / movie | பத்திரிகை | - news paper | உறவினர் | - relation |
| செய்தி | - news | சமாதானம் | - peace | அயலவர் | - neighbour |
| தொலைக்காட்சி | - television | அண்ணன் | - elder brother | பக்கத்துவீட்டார் | - nextdoor people |
| மணித்தியாலம் | - hour | தம்பி | - younger brother | குடிமகன் | - civilian |
| நிமிடம் | - minute | அக்கா | - elder sister | காசு | - money |
| செக்கன் | - second | தங்கை | - younger sister | மரக்கறி | - vegetable |
| யுத்தம் | - war | மதியவுணவு | - lunch | கோழியிறைச்சி | - chicken |
| கட்டுரை | - essay | காலையுணவு | - breakfast | மாட்டிறைச்சி | - beef |
| உடுப்பு | - clothe | இராச்சாப்பாடு | - dinner | ஆட்டிறைச்சி | - mutton |
| சவர்க்காரம் | - soap | சிற்றுண்டி | - tiffin | மீன் | - fish |

- **What you have learnt up to now -**
  **இது வரை நீங்கள் கற்றிருப்பவை**

> கீழ்வரும் கேள்விகளுக்கான விடைகளை உங்களுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள். உங்களது தெளிவான விடைகளே நீங்கள் இது வரை கற்றிருப்பவையாகும்.

01. ஆங்கிலத்தில் எத்தனை காலங்கள் இருக்கின்றன?
02. வாக்கியங்களின் இரு பிரதான வகைகள் எவை?
03. செயப்பாட்டுவினை வாக்கியத்தில் எத்தனை காலங்கள் (Tenses) அமையாது?
04. Capital Letters எனப்படுகின்ற பெரிய எழுத்துக்களை எந்தச் சந்தர்ப்பங்களில் உபயோகிப்பது?
05. ஒரு ஆங்கில வாக்கியத்தில் சொற்கள் எந்த ஒழுங்கில் அமையும்?
06. ஒரு பொதுவான உண்மையைக் குறிப்பிடும்போது, எச் சந்தர்ப்பத்தில் எழுவாய்க்கு முன்னால் 'the' அமையும்?
07. எழுவாய் என்றால் என்ன?
08. வினைச்சொல் என்றால் என்ன?
09. செயப்படுபொருள் என்றால் என்ன?
10. காலம் என்றால் என்ன?
11. 12 வினைச்சொற்களின் 'Stem, Past tense, Past participle, Present participle' எவை?
12. தனது, அவனுக்கு, தன்னை, அவளை, அதனை, போன்ற சொற்களின் ஆங்கிலச் சொற்கள் எவை?
13. 'Parts of Speech' என்றால் என்ன?
14. பெயரச்சொல் என்றால் என்ன?
15. பிரதிப்பெயர்ச்சொல் என்றால் என்ன?
16. பெயரடைமொழி என்றால் என்ன?
17. வினைச்சொல் என்றால் என்ன?
18. வினையடைமொழி என்றால் என்ன?
19. இடையுரிச்சொல் என்றால் என்ன?
20. இணைப்புச்சொல் என்றால் என்ன?
21. விழிப்புச்சொல் என்றால் என்ன?
22. 'ISSE' பாடநெறிக்குத் தேவையான தமிழ்ச்சொற்களின் ஆங்கிலச்சொற்கள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிங்கள மொழி அறிவு

'Friendship' எனும் பெயரில் அனைவரும் பலன் பெறக்கூடிய மாதாந்த அறிவு நூலொன்றை திரு. ஐசக் யேசுதாசன் (ஆங்கில ஆசிரியர்) அவர்கள் வெளியிட தீர்மானித்து, அந்த சஞ்சிகையில் சிங்களமொழி பாடங்களையும் உள்ளடக்கும் ஆவலில், என்னிடம் பாடங்களைத் தர முடியுமாவெனக் கேட்டார். தற்போது எனக்குள்ள வேலைப்பழுவின் நிமித்தம் இதற்காக நேரத்தை ஒதுக்குவது கடினமாக இருப்பினும் அவரது இந்த சேவைமனப்பான்மையுடனான வெளியீட்டிற்கு பாடங்களை எழுத நானும் உடன்பட்டுள்ளேன்.

இனி, இதை எழுதும் என்னைப்பற்றி சற்று கூறுவது அவசியமாகும். அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியில் கல்விகற்ற நான் பாடசாலையிலும் சில பௌத்த மதகுருமாரிடமும் சிங்கள மொழியைக் கற்றேன். பின்னர் 1965 தொடக்கம் அரச சேவையில் நீர்ப்பாசனம், பெருந்தெருக்கள், இயந்திர உபகரணம் போன்ற திணைக்களங்களிலும் இறுதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தராக சேவையாற்றிய பின் 2004ல் ஓய்வு பெற்றேன்.

1991ல் கொழும்புக்கு மாற்றலாகி வந்த பின் பல தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழி பரீட்சையில் சித்தியடையாமையினால், சம்பள அதிகரிப்பின்றி இருந்தார்கள். இப்படியான பலரின் வேண்டுகோளுக் கிணங்க அவர்களுக்கு அரச கரும மொழி அறிவைப்புகட்டி பரீட்சையில் சித்திடையச் செய்துள்ளேன்.

பின்னர் இதே உத்தியோகத்தர்களுள் சிலர் என்னை அணுகி தமது பிள்ளைகளுக்கு இரண்டாம் மொழி பாடத்தைக் கற்றுக்கொடுக்கும்படி கோரியதன்பேரில் 1983ல் 'Mod' எனும் தனியார் கல்வி நிறுவனத்திலும் அதன்பின்னர் 'Haro', 'Modern', 'P.U.C.' போன்ற பல கல்வி நிறுவனங்களைத் தொடர்ந்து தற்போதும் சில கல்வி நிறுவனங்களில் இரண்டாம் மொழியான சிங்களத்தைத் தொடரந்து கற்பித்துவருகின்றேன். இதுவரை பல நூற்றுக்கணக்கான எனது மாணவ மாணவிகள் O/L பரீட்சையில் 'A' சித்தி பெற்றிருக்கின்றார்கள்.

அடுத்து சிங்கள மொழி பற்றி சிறிது விளக்குவது பொருத்தமாகுமென கருதுகின்றேன்.

சிங்கள மொழியும் தமிழ் மொழி போன்றதே. உயிர், மெய், உயிர்மெய்யெழுத்துக்களைக் கொண்டுள்ளது. சில எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களின் வடிவில் அமைந்துள்ளன. இம் மொழியில் பல பாளி, சமஸ்கிருத, தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. தமிழில் பாவிக்கப்படும் சமஸ்கிருதச் சொற்கள் சிறிது மாற்றத்துடன் சிங்கள மொழியில் வருவதை நீங்கள் பாடங்களைப் படிக்கும்போது அவதானிக்கலாம்.

உதாரணம் :

| தமிழ் மொழியில் | சிங்கள மொழியில் | கருத்து | உச்சரிப்பு |
|---|---|---|---|
| மாதா | මාතා | அம்மா | மா(த்)தா |
| சமுத்திரம் | සමුද්‍රය | கடல் | சமுத்திரய |
| வீதி | වීදිය | பாதை | வீதிய |
| புஷ்பம் | පුෂ්පය | மலர் | புஷ்பய |
| ஆகாரம் | ආහාරය | உணவு | ஆஹாரய |

| தமிழ் எழுத்துக்கள் போன்ற சிங்கள எழுத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|
| ப | ய | ட | வ | அ |
| ප | ය | ට | ව | අ |

- **நாம் ஏன் சிங்கள மொழியைக் கற்கவேண்டும் ?**

(1) தமிழ் பேசும் ஒருவர் சிங்கள மொழியைத் தெரிந்திருப்பாராயின், இலங்கையின் எந்தப் பகுதிக்கும் தனித்துச்சென்று வரலாம்.

(2) காரியாலயங்களில் கடமைபுரிபவர்களாயின், தமது கடமையைச் சிறப்பாகச் செய்யவும் சக உத்தியோகத்தர்களுடனும் ஏனையோருடனும் சிநேகபூர்வமாக பழகவும் உதவும்.

(3) வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாயின், சிங்கள மொழி பேசுபவர்களுடன் சேர்ந்து தமது வியாபார நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்யக்கூடியதாகவிருக்கும்.

(4) சிங்கள மொழியைத் தெரிந்த ஒருவர், சிங்களப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களை வாசிப்பதன் மூலம் அறிவை விருத்திசெய்யவும் அவர்களது எண்ணக்கருத்துக்களை அறியவும் வாய்ப்பேற்படும்.

இந்த மாதாந்த சஞ்சிகையில் நான் எனது பாடங்களை மிக ஆரம்பத்திலிருந்தே எழுதுவதற்கு எண்ணியுள்ளேன். எனவே, தொடரந்துவரும் பாடங்களை அக்கறையுடன் கற்பீர்களாயின் காலப்போக்கில் கா.பொ.த. (சாதாரண தர) சிங்கள (இரண்டாம் மொழி) பரீட்சையில் சித்தியடையக்கூடிய அறிவினைப் பெறுவீர்களென்பது திண்ணம்.

உங்கள் முயற்சியில் நீங்கள் வெற்றிடையவும் அதன்மூலம் உங்கள் வாழ்வு உயரவும்

எனது நல்லாசிகள்!

\- பூபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

■ சிங்களம் கற்போம் !



## உயிர் எழுத்துக்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | அැ | அෑ | இ | ஈ | உ | ஊ |
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ | උ | ඌ |
| எ | ஏ | ஒ | ஓ | ங் | ஐ | ஔ | |
| එ | ඒ | ඔ | ඕ | ං | ඓ | ඖ | |

## மெய் எழுத்துக்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Ka<br>ක | Ga<br>ග | Ja<br>ජ | Ta<br>ට | Da<br>ඩ | ண/ன<br>ණ | த்த<br>ත |
| the<br>ද | ன/ண<br>න | Pa<br>ප | Ba<br>බ | ம<br>ම | ய<br>ය | ற<br>ර |
| ல/ள<br>ල | வ<br>ව | Sa<br>ස | Ha<br>හ | ள/ல<br>ළ | Fa<br>ෆ | ஞ<br>ඥ |

